**செய்தி வெளியீடு எண்: 24/2025** **நாள்: 15.03.2025**

**பத்திரிக்கைச் செய்தி**

**திருமங்கலம் மெட்ரோ இரயில் நிலையத்தில் பயணிகளின் வசதிகாக கூடுதல் வாகனம் நிறுத்துமிடம் வசதி விரிவாக்கம்**

சென்னை மெட்ரோ இரயில் நிலையங்களில் அதிகரித்து வரும் பயணிகளின் தேவையை பூர்த்தி செய்யும் வகையில், சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம் திருமங்கலம் மெட்ரோ இரயில் நிலையத்தில் வாகனம் நிறுத்துமிடம் வசதிகளை விரிவுபடுத்தியுள்ளது. திருமங்கலம் மெட்ரோ நிலையத்தின் துணை கட்டிடத்திற்கு அருகில் தற்போதுள்ள B2 வாகன நிறுத்தும் பகுதியில் கூடுதலாக ஒரு தளம் வாகன நிறுத்தும் (Mezzanine level parking) இடமாக மேம்படுத்தப்பட்டுள்ளது. இந்த புதுப்பிக்கப்பட்ட வாகனம் நிறுத்துமிடத்தில் கூடுதலாக 400 இருசக்கர வாகனங்களை நிறுத்த முடியும்.

தற்போது, திருமங்கலம் மெட்ரோ இரயில் நிலையத்தின் B2 வாகனம் நிறுத்துமிடம் 1,000 இருசக்கர வாகனங்களை நிறுத்தும் வசதியைக் கொண்டுள்ளது. இந்த புதிய விரிவாக்கம் பயணிகளுக்கு கூடுதல் வசதியை வழங்கி, மெட்ரோ சேவையை மேலும் எளிமையாகவும் திறம்படவும் பயன்படுத்த ஊக்குவிக்கும்.

மேம்படுத்தப்பட்ட இந்த வாகன நிறுத்துமிடத்தை சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தின் தலைமை ஆலோசகர் (இயக்கம் மற்றும் பராமரிப்பு) திரு. பி. கோபிநாத் மல்லியா அவர்கள் திறந்து வைத்தார். இந்நிகழ்ச்சியில் சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தின் ஆலோசகர் (மின்சாரம் மற்றும் இயந்திரவியல்), திரு. எஸ்.கே.நடராஜன், கூடுதல் பொது மேலாளர் (மெட்ரோ இரயில் மற்றும் இயக்கம்) திரு. எஸ். சதீஷ் பிரபு மற்றும் சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தின் உயர் அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் உடனிருந்தனர்.

**வெளியீடு: இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்**
**சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம், சென்னை – 600 035.**